# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP)

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தொலைபேசி : 011-2147401 தொ.நகல்: 011-2147412 ஜூன் 29, 2016

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் உற்பத்தித் துறைக்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணைக் கணிப்பிட ஆரம்பித்துள்ளது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது (IIP) மிக முக்கியமான குறிப்பிட்ட பொருளாதார குறிகாட்டியாக உள்ளதுடன் அதன் முக்கிய நோக்கம் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் மாற்றங்களை வெளிக்கொணர்வதாகும். இது ஒரு பொருளாதார அபிவிருத்தியின் திருப்புமுனைகளை அடையாளங்காண பயன்படுகின்றது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு (IIP) தொகுக்கப்பட்டது. வேறுபட்ட ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட IIP சுட்டெண்கள் ஒப்பிடப்பட முடியாதவை.

கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சத்தரசிங்க அவர்கள் தெரிவிக்கையில், சுட்டெண்ணைக் கணிப்பதற்காக கைத்தொழில் உற்பத்திகளின் பங்காற்றுகை தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட வருடாந்த அளவீடு - 2015 தரவுகள் பயன்படுத்தப்பட்டது. உற்பத்தித் துறையின் பெறுமதி சேர் அடிப்படையில் எடைகளின் மதிப்பு பெறப்பட்டன. நாட்டின் மொத்த கைத்தொழில் உற்பத்தியில் உணவுப் பொருள் உற்பத்தி அதிகளவு பங்களிப்பை செலுத்துவதுடன் (35.2%) ஆடை அணிகலன் உற்பத்தி (19.8%) மற்றும் உலோகமல்லாத தாதுப் பொருட்கள் போன்ற கைத்தொழில்கள் (7.8%) அடுத்த இரண்டு நிலைகளை பிடித்துள்ளன.

2016ம் ஆண்டு முதல் காலாண்டில் வெளியிடப்பட்ட IIP மதிப்பீடுகளின் படி, 2015 ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2016 ஜனவரி மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 3.4% ஆல் அதிகரித்துள்ளது. பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களிலும் உற்பத்தி வீதம் 1.9% மற்றும் 8.7%ஆக அதிகரிப்பை காட்டுகிறது. 2015ஆம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 2016 காலாண்டு உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 4.8% ஆல் அதிகரித்துள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம், வருடம் | IIP(2015=100) |
|---|---|
| ஜனவரி-2016 | **103.4** |
| பெப்ரவரி-2016 | **101.9** |
| மார்ச்-2016 | **108.7** |
| 1ம் காலாண்டு-2016 | **104.8** |

2015 ஆம் ஆண்டின் சராசரி மாதாந்த உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 2016 ஜனவரி மாத உற்பத்திகளில் பெற்றோலிய உற்பத்திகள், இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் (22.9%, 24.9%) காட்டுகின்றது. 2016 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் உணவு உற்பத்தி வீதம் 1.1%, 0.8% மற்றும் 3.0% ஆல் அதிகரிப்பை காட்டுகிறது. குடிபான உற்பத்தியானது ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் வீழ்ச்சியைக் காட்டும் அதே வேளை மார்ச் மாதத்தில் 14.7% அதிகரிப்பைக் காட்டுகின்றது. முதல் காலாண்டில் உணவு உற்பத்தி மற்றும் குடிபானங்கள் முறையே 1.6%, 0.2% ஆக அதிகரித்துள்ளது. ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் ஆடை அணிகலன்களின் உற்பத்தி முறையே 5.8%, 7.1%, 7.6% குறிப்பிட்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் 6.8%ஆக காலாண்டு அதிகரிப்பைக் காட்டுகின்றது. (மேலதிக தகவல்களுக்கு www.statistics.gov.lk/Industries)

கலாநிதி ஏ.ஜே. சத்தரசிங்க

பணிப்பாளர் நாயகம்